**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்**: 2008 ஏப்ரல் 16,17,18 ஆகிய தினங்களில் **தோப்புக்கொல்லை, தேக்காட்டூர், அழியாநிலை** ஆகிய 3 இலங்கை அகதிகள் முகாமில் வழங்கப்பட்ட உணவுப் பொருள் நிமித்தம் தேவ நாமம் மகிமைப்படவும், யோவான் சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்ட மக்கள் அதை வாசிக்கவும், சத்தியத்தை அறியவும் ஜெபியுங்கள்.

**செவ்வாய்**: 2008 ஜுன் மாதம் புதுக்கோட்டையில் திறக்கவிருக்கும் TVGM சிறுவர் இல்லத்திற்காகவும், வாடகை வீடு, வார்டன்,சமையல், தகுதியான பிள்ளைகள் தேர்ந்தெடுக்கப்பட ஜெபியுங்கள்.

**புதன்:** திருச்சி மணிகண்டம் பகுதியில் 2 ஏக்கர் நிலம் வாங்கப்படவும், குஷ்டரோகி காலனி அமைக்கப்படவும், மருத்துவ வசதி, தொழில் வசதி ஏற்படுத்தப்படவும் ஜெபியுங்கள்.

**வியாழன்**: 2007–2008 TVGM அக்கவுண்ட் ஆடிட் செய்து முடிக்கப்பட்டதற்காக தேவனைத் துதியுங்கள். TVGM FCRA ஆர்டர், மற்றும் Social Service–க்கு 80G ஆர்டர் கிடைக்க ஜெபியுங்கள்.

**வெள்ளி:** TVGM Discipleship & Leadershi Training Centre மற்றும் TVGM Administration Office கட்டப்பட ஜெபியுங்கள்.

**சனி:** புதுக்கோட்டை –அண்டகுளம் ஜெபவீடு, விராச்சிலை ஜெபவீடு மற்றும் கோயம்புத்தூர்– குருவகுளம் ஆகிய 3 ஜெபவீடுகளும் கட்டி முடிக்கும் தருவாயில் இருந்தாலும் பிரதிஷ்டை வைக்கமுடியாமல் உள்ளூரிலிருந்தே தடைகள் எழும்பியுள்ளது. மற்றும் R.S.S. மூலம் ஏற்பட்ட தடைகள் யாவும் நீங்கும்படி ஜெபியுங்கள்.

**ஞாயிறு**: TVGM தலைமை அலுவலகத்தில் பணிபுரிய அர்ப்பணிப்புள்ள, அழைப்பு பெற்ற கம்பியூட்டர் அறிவு மற்றும் ஆங்கில அறிவு பெற்றவர்கள் கிடைக்க ஜெபியுங்கள். நாகர்கோவில் அறிமுகப் பணி அலுவலகத்திற்கு அர்ப்பணிப்புள்ளவர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

**வாசகர்கள் கவனத்திற்கு!**

தாங்கள் கவரில் வைத்து அனுப்புகிற பணம் பெரும்பாலும் எங்கள் கரங்களில் கிடைப்பதில்லை. ஆகவே தயவுசெய்து மணியார்டர் மூலம் அனுப்பி வைத்து உதவும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.


**T.V.G.M.குமரி மாவட்ட அறிமுகப்பணிஅலுவலகம்,**

**5 / 3A** கிரவுண் தெரு, வாத்தியார் விளை,

நாகர்கோவில் – 629 001. கன்னியாகுமரி மாவட்டம்.

**செல் : 98658 26424 போன் : 04652- 277251.**



Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**


**இயேசு கிறிஸ்துவே கர்த்தர்**


**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**CHIEF EXECUTIVE OFFICE**


கடித நாள்: 10.05.08.



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் வாழ்த்துக்கள்.

என்னுடைய ***Master Degree Graduation-*** க்காக ஜெபித்த ஒவ்வொருவருக்கும் நன்றி. என் பெற்றோர்களும் கலந்து கொள்ள கர்த்தர் கிருபை செய்தார்.மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

2008 ஏப்ரல் 16,17,18 ஆகிய தினங்களில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள **தோப்புக்கொல்லை, தேக்காட்டூர், அழியாநிலை** ஆகிய 3 இலங்கை அகதிகள் முகாமில் வசித்து வரும் 4000 பேருக்கு ***Elim*** சபையின் பாஸ்டர் விக்கி தலைமையில் ரூ.175 மதிப்புள்ள உணவுப் பொருட்களை இலவசமாக வழங்க கர்த்தர் கிருபை செய்தார்.

உணவுப்பொருள் வழங்கும்போது, பெரும் உதவி செய்த ***AJC*** ஸ்தாபகர் பாஸ்டர் கைவல்யம் மற்றும் உடன் ஊழியர் 10 பேருக்கும் TVGM Social Service சார்பில் நன்றியை தெரிவிக்கிறோம்.

சிறு பிள்ளை முதல் முதியோர் வரை அனைவருக்கும் உணவுப் பொருள் வழங்கப்பட்டதால், சுமக்க முடியாமல் தூக்கிச் சென்ற காட்சி அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. அனுமதி வழங்கிய தமிழக அரசுக்கு நன்றி.

2008 ஜுன் மாதம் புதுக்கோட்டை– **பாஸ்டர் ஜான் பீட்டர்** காம்பவுண்டில் ஆரம்பிக்கவிருக்கும் TVGM சிறுவர் இல்லத்திற்காக ஜெபியுங்கள்.

கிறிஸ்துவுக்குள்,

***Stephen Christopher.***

## உள் பக்கம் ...


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| Wrapper – வாக்குத்தத்தம் | Photos |
| Wrapper - Inner | Photos |
| காரியதரிசி கடிதம் | 1 |
| வாக்குத்தத்த செய்தி | 2 - 4 |
| Hindi, Malayalam, English | 5 - 8 |
| 100 கிராம ஊழிய நோட்டிஸ் | 9 |
| 100 கிராம ஊழிய அறிக்கை<br>இயேசுவை விரும்புவோர் முகாம் | 10 -12 |
| புறமத நண்பர்கள் சாட்சி<br>விசுவாசிகளின் சாட்சிகள் | 13 |
| புதுக்கோட்டை 100கிராம<br>ஊழிய அறிக்கை | 14-16 |
| TVGM தையற்பள்ளி | 17-18 |
| TVGM ஸ்தாபகரிடமிருந்து | 19 |
| தினசரி ஜெபக்குறிப்புகள் | 20 |
| போட்டோ | W 3 |
| தொடர்பு முகவரி | W4 |


**வாக்குத்தத்த தேவசெய்தியுடன் ஆசீர்வாத ஜெபம் & 12 மணி நேர துதி ஆராதனை**

**நாள் :** 01.06.2008 ஞாயிறு

**துதி ஆராதனை நேரம்:**

காலை 7 மணி முதல் மாலை 7 முடிய

**வாக்குத்தத்த செய்தி நேரம்:**

மாலை 7 முதல் 8 மணி வரை

**துதி ஆராதனை_&**
**வாக்குத்தத்த செய்தியளிப்பவர்:**

**பாஸ்டர் V. ஜெயபால்**

**ஓரேப் கிறிஸ்டியன் அசெம்பிளி, திருச்சி.**

யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

வாக்குத்தத்த செய்தி

# அதைப் பின் தொடர்; அதை நீ பிடித்து,சகலத்தையும் திருப்பிக் கொள்வாய். 1சாமு.30:8

எனக்கன்பான கர்த்தருடைய பிள்ளைகளே!

கர்த்தருடைய வாக்குத்தத்தம் சொல்கிறது:

**அதைப் பின்தொடர்; அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய்.** ஆமென். எல்லாவற்றையும் இழந்துபோனேனே! என அங்கலாய்க்கும் கர்த்தருடைய பிள்ளையே, உன்னைப் பார்த்துத் தான் கர்த்தருடைய வார்த்தைச் சொல்கிறது,

**அதைப் பின் தொடர்**

இது கர்த்தரே சொல்லும் ஒரு வார்த்தையாகும். தாவீது தன்னுடைய மனுஷரோடே பெலிஸ்தரின் தேசத்துக்கு புறப்படுகிறார். அப்பொழுது தாவீது **சிக்லாக்** வந்து சேருவதற்கு முன்னே ஒரு துக்க செய்தியைக் கேள்விப் படுகிறார். அது என்னவென்றால் அமலேக்கியர் **சிக்லாக்** மேல் விழுந்து, கொள்ளையடித்து, சிக்லாக்கை அக்கி னியால் சுட்டெரித்து, அங்குள்ள ஸ்திரிகளாகிய சிறியவர்களையும், பெரியவர்களையும், ஒருவரையும் கொன்று போடாமல் அவர்களை பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள்.

தாவீது பார்க்கிறார், சிக்லாவில் இருந்த தன்னுடைய மனைவிகளும், தங்கள் குமாரரும், குமாரத்திகளும் சிறை பிடித்து போகப்பட்டுள்ளார்கள். அப்பொழுது தாவீதும், தன்னோடிருந் தவர்களும் தங்களுக்கு அழுகிறதற்கு பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள். தாவீது மிகவும் நெருக்கப் பட்டார். சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக் கிலேசமானதினால், தாவீதின் மேலே கல்லெறிய வேண்டுமென சொல்லிக் கொண்டார்கள்.

தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டார். தாவீது ஏபோத்தை கொண்டு வரச் சொன்னார்.

அப்பொழுது தாவீது கர்த்தரை நோக்கி, நான் அந்த தண்டை பின் தொடர வேண்டுமா? அதைப் பிடிப்பேனா? என்று கேட்டார். **1சாமு.30:8** அதற்கு கர்த்தர் தாவீதை நோக்கி, **அதைப் பின்தொடர்; அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய்.** என்றார்.

**<u>1சாமு.30:18–20</u>**

அமலேக்கியர் பிடித்துக் கொண்டு போன எல்லாவற்றையும், தன்னுடைய இரண்டு மனைவிகளையும், தாவீது விடுவித்தான். அவர்கள் கொள்ளையாடிக்கொண்டு போன எல்லாவற்றிலும், சிறியதிலும் பெரியதிலும், குமாரரிலும், குமாரத்திகளிலும் **ஒன்றும் குறைவுபடாமல் எல்லாவற்றையும் தாவீது திருப்பிக் கொண்டான்.** எல்லா ஆடுமாடுகளையும் தாவீது பிடித்துக் கொண்டான். ஆமென்.



## T.V.G.M. ஸ்தாபகரிடமிருந்து . . . . .

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக!

2008ம் ஆண்டில் தேவன் அபரிதமாக T.V.G.M. ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறார். ஜெபிக்கிற மக்களுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி சொல்கிறோம்.

2008 ஜனவரி முதல் மே மாதம் முடிய 7 ஜெபவீடுகள் கட்டி முடிக்கவும், பிரதிஷ்டை செய்யவும் கர்த்தர் கிருபை செய்தார். தேவன் வல்லமையாக பயன்படுத்திய *Yishun Evangelical Church* போதகர் **பாஸ்டர். ஜோசப் ஜெபமணி** அவர்கள் குடும்பத்திற்காகவும், சபை மக்களுக்காகவும் தேவனைத் துதியுங்கள். சபையிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் ஒரு ஆலயத்தை கட்டி கொடுக்கும்படி ஆத்தும பாரத்தைக் கொடுத்து ஊக்குவித்து வருகிறார்கள். 2008 ஜனவரி முதல் மே மாதத்திற்குள் பட்டுக்கோட்டை அருகிலுள்ள **சிரமேல்குடி** கிராமத்தில் **சகோ. டேனியல் ரீட்டா** U.K. அவர்கள் கட்டித்தந்த ஓலைக்கூரை ஜெபவீட்டையும், புதுக்கோட்டை – **விஸ்வகர்மா நகர்** ஓலைக்கூரை ஜெபவீட்டையும் **பாஸ்டர். ஜோசப் ஜெபமணி** அவர்கள் T.V.G.M. சார்பில் திறந்து வைத்தார்கள்.

2008 ஜனவரி முதல் மே மாதத்திற்குள் தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள **தோப்புக்கொல்லை, தேக்காட்டூர், அறியாநிலை** ஆகிய 3 இலங்கை அகதிகள் முகாமிலுள்ள 4000 பேருக்கு ஒவ்வொருவருக்கும் ரூ 175/– மதிப்புள்ள உணவுப்பொருட்கள் ( அரிசி 1 kg சீனி 1 kg, மைதா 1 kg, து.பருப்பு 1 kg, 200 கிராம் அமுல்யா பவுடர், 3 Roses Tea ) இலவசமாக Auckland **பாஸ்டர் விக்கி** குழுவினர் , **பாஸ்டர். பீட்டர், சகோ. மெல்வின் பிள்ளை** T.V.G.M. Social Service மூலமாக வழங்கினார்கள். மற்றும் விதவைகள், ஊனமுற்றோருக்கும் நோயாளிகளுக்கும் உதவிகள் வழங்கினார்கள். உத்தேசமாக **பாஸ்டர். விக்கி** 9 லட்சம் T.V.G.M மூலம் வழங்கி உதவி செய்தார்கள். இவைகளை ஒழுங்குமுறை செய்வதற்கும், அரசாங்க அனுமதி பெறுவதற்கும் உத்தேசமாக 3 மாதம் ஆனது. ஆனால் 2008 ஏப்ரல் 16, 17, 18, 21 ஆகிய 4 தினங்களுக்குள் முழுப் பணமும் செலவு செய்து முடிக்கப்பட்டது.

பிறந்த பிள்ளை முதல் வயது முதிர்ந்த ஒவ்வொருவருக்கும் ஆளுக்கொரு பார்சல் கொடுத்தபடியால் தூக்க முடியாமல் தூக்கிச் சென்றார்கள். இதைப்பற்றிய DVD. தயார் செய்துள்ளோம். விரும்புகிறவர்கள் தபால் எழுதுங்கள். ஒரு காப்பி அனுப்ப முயற்சிக்கிறோம்.

இலவச பொருள்விநியோகத்திற்கு உதவி செய்ய A.J.C. குழுவினர் 10 பேர், **பாஸ்டர். கைவல்யம் டேவிட்** தலைமையில் T.V.G.M. Social Service வுடன் ஒத்துழைத்தார்கள். அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.

2007–2008 ம் ஆண்டு T.V.G.M. கணக்குகளை ஆடிட்டர் . ஜான் ராஜசேகரன் அவர்கள் மிகவும் நேர்த்தியாக முடித்து தர கர்த்தர் உதவி செய்தார்.

ஜெபவீட்டை 75% மேல் கட்டி முடித்தும் பிரதிஷ்டை செய்ய முடியாமலிருக்கும் புதுக்கோட்டை – **அண்டகுளம், விராச்சிலை** ஜெபவீட்டிற்காகவும், கோயம்புத்தூர்– **குருவகுளம்** ஜெபவீட்டிற்காகவும் ஜெபியுங்கள். புதுக்கோட்டை A.J.C. ஜெபவீட்டை ஏற்ற நாளில் கட்டிமுடித்து பிரதிஷ்டை செய்ய ஜெபியுங்கள்.

**கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.**

***P.T. Christopher***

* இந்த தையற் பயிற்சி TVGM சோசியல் சர்வீஸ் (சமூகச்சேவை) சோமரசம்பேட்டை ஸ்தாபனம் மூலமாக எனது பார்வையில் இயங்கி வருகிறது. எனது பயிற்சியில் இதுவரை 39 நபர்களுக்கு பயிற்சி முடித்து சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

TVGM **தையற்பயிற்சியின் தேவைகள்:-**

10 தையல் மெஷின்கள், 10 ஸ்டூல், 3 செண்ட் நிலம் கட்டடம், வாடகை கட்டடத்துக்கு (தற்போதைய) ஃபேன், லைட்

**தற்போது நம்வசம் உள்ள உபகரணங்கள்:-**

11 தையல் மெஷின், 11 ஸ்டீல் ஸ்டூல், ஒரு ஆபிஸ் டேபிள், ஒரு கட்டிங் டேபிள். ஆக மொத்தம் 24 உபகரணங்கள் இவையாவும் TVGM ஸ்தாபனத்தின் தையற்பொருட்கள்.

**தையற்பயிற்சியினால் வரும் ஆசீர்வாதம்:-**

1. இதன் மூலமாக புறஜாதி மக்களை (பெண்களை) நாம் சந்திக்கிறோம். சுவிசேஷம் அறிவிக்கிறோம்.
2. கிராமங்களில் புறஜாதிகளிடம் நமக்கு ஒரு நட்பும் நன் மதிப்பும் உண்டாகிறது.
3. நாம் நடத்தும் விசேஷங்களில் இப்படி பயிற்சி பெறுகிறவர்கள் பங்கெடுக்கிறார்கள். அதன் மூலம் சுவிசேஷம் பெறுகிறார்கள்.
4. சுவிசேஷ எதிர்ப்பு பகுதிக்குள் ஊழியராக நுழைய முடியாத பட்சத்தில் சேவையாளராக நுழைகிறோம்
5. கிறிஸ்துவின் அன்பு, நற்கிரியை வெளிப்படுத்துகிறோம்.
6. மற்ற நபர்கள் (கிறிஸ்தவர் அல்லாதவர் ) நடத்தும் பயிற்சிகள் வருமானத்தை சார்ந்தவை எனவே அது மக்களுக்கு மிகவும் பிரயோஜனமாக அமைவதில்லை.
7. நம் சேவை, கிறிஸ்துவண்டை வழி நடத்துதல் போன்ற நோக்கத்தில் செய்வதால் மிகவும் பிரயோஜனமாய் அமைகிறது. அமைந்திருக்கிறது.
8. மக்கள் (மாணவியர்) நமது உண்மை, தனித்தன்மை, போன்றவற்றை புரிந்துகொள்ளுகிறார்கள்.
9. எல்லாவற்றுக்கும் மேலாக, மதம் சார்ந்தது, திருச்சபை என்ற எண்ணத்துக்கும் நடுவில் இது ஒரு சேவை, தொண்டு, பொதுநலம் மிக்க ஒரு செயல் என்ற உண்மை வெளிப்படுகிறது.

**திருச்சபை தோறும் இயந்திரம் கொடுப்பதில் ஏற்படுகின்ற இடர்பாடுகள்:-**

1. இயந்திரங்கள் மேல் கவனிப்பு இல்லை.
2. சில பொருட்கள் சேதமடைகிறது ( பொருப்பு இல்லை).
3. திறன் பட செய்ய போதிய திறமை அனுபவம் இல்லை.
4. ஒரு தரம் , இரண்டு தரம் பயிற்சி கொடுத்து வேறு இடம் செல்வதால் வளர்ச்சிக்கான காரியம் கண்டறிந்து செயல்படுவதில்லை.
5. ஸ்தாபனம் எதிர்பார்கும் ரிசல்ட் கிடைப்பதில்லை ( TVGM )
6. ஆக மொத்தத்தில் பெயிலியர்.

**<u>ஒரே இடத்தில் இருப்பதால்:-</u>**

1. வளர்ச்சியடைகிறது. அதற்கான திட்டம் வகுக்கப்படுகிறது.2. ஒருவரது மேற்பார்வையில் இருப்பதால் உத்திரவாதம் காணப்படும்.3. சேதமில்லை.4. நல்ல ரிசல்ட் கிடைக்கிறது.5. ஒரே சென்டராக செயல்படுவதால் சக்சஸ் ஆக செயல்படும்.

**கர்த்தர் தாமே என்னுடைய சாட்சியை ஆசீர்வதிப்பாராக!**

இப்படிக்கு,
K. **ஜான் நேசகுமார்.**



என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே!

தாவீதை ஒருவிசை நினைத்துப் பாருங்கள். எத்தனை வேதனையான அனுபவம்.

**1.** தாவீதின் இரண்டு மனைவிகளும், குமாரத்திகளும், குமாரர்களும் சிறைப்பட்டு போய் உள்ளார்கள்.

**2.** தாவீது அழுகிறதற்கு பெலனில்லாமல் போகுமட்டும் அழுகிறார்.

**3.** ஆனால் மற்றொரு பக்கம் தங்கள் குமாரர், குமாரத்திகளை இழந்தவர்கள் தாவீது மீது கல்லெறிய ஆயத்தப் படுகிறார்கள்.

**இந்த சூழ்நிலையில் தாவீது செய்தது என்ன ?**

**1.** தாவீது, கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக் கொண்டார்.

**2.** தாவீது ஏபோத்தை கொண்டு வர சொன்னார்.

**3.** தாவீது கர்த்தரை நோக்கி, அந்த தண்டை பின்தொடர வேண்டுமா ? அதைப் பிடிப்பேனா ? என்று கேட்டார். அப்பொழுது தான் கர்த்தர் சொல்கிறார்:

**அதைப் பின்தொடர்; அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய்.** என்றார்.

அப்படியே தாவீது **ஒன்றும் குறைவுபடாமல் எல்லாவற்றையும் திருப்பிக் கொண்டான்.**

எல்லாவற்றையும் இழந்து போன சகோதரியே, சகோதரனே, அழுகிறதற்கு பெலனில்லாமல் போகு மட்டும் அழுதுகொண்டிருக்கும் கர்த்த ருடைய பிள்ளையே, மற்றொரு பக்கம் உனக்கு அன்பானவர்களே உனக்கு விரோதமாக பேசும் வார்த்தைகளினால் கல்லெறியப்படும் அன்பு சகோதரனே, சகோதரியே!

தாவீதைப் போல, கர்த்தருக்குள் உங்களை திடப்படுத்திக் கொள்ளுங்கள். தேவனுடைய வசனத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். முழங்காலிலே நில்லுங்கள். தேவனுடைய முகத்தை எட்டிப் பாருங்கள்.

**சங்கீதக்காரன் கூறுகிறார்:**
**<u>சங்கீதம்</u>121:1**

எனக்கு ஒத்தாசை வரும்
பர்வதங்களுக்கு நேராக என்
கண்களை ஏறெடுக்கிறேன்.
வானத்தையும் பூமியையும்
உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து
எனக்கு ஒத்தாசை வரும்.

ஆம், கர்த்தருடைய பிள்ளையே!

கர்த்தரிடத்திலிருந்து உனக்கு ஒத்தாசை வரும். ஆதலால் கர்த்தரையே நோக்கிப் பாருங்கள். கர்த்தரை நோக்கிப் பார்க்கிற உங்களைப் பார்த்து கர்த்தர் சொல்கிறார்:

**அதைப் பின்தொடர்; அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய்.**

ஆமென்!

**முதலாவதாக:** இன்று ஒரு விசை, உங்கள் வாழ்க்கையை சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒருவேளை இன்று நீங்கள் நன்றாக இருக்கலாம். ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பு உங்கள் வாழ்க்கை எப்படியிருந்தது. சொந்த உறவினரால், நண்பர்களால், உடன் ஊழியரால் வஞ்சிக்கப்படவில்லையா ?

சிலர் இன்று எல்லாவற்றையும் இழந்து நிற்கிறீர்கள். எதுவானாலும் சரி. கர்த்தரின் வார்த்தை சொல்கிறது:

**அதைப் பின்தொடர்; அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய்.**

**இரண்டாவதாக:** உலக ஆசீர்வாதத்தை மட்டுமல்ல, உன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் எதை இழந்து போனாய் ?

உன்னுடைய இரட்சிப்பை இழந்து போனாயோ ? உன் பரிசுத்தத்தை இழந்துபோனாயோ ? உன் அபிஷேகத்தை இழந்துபோனாயோ ? உன் வரங்களை இழந்துபோனாயோ ? உன் ஊழியத்தை இழந்துபோனாயோ ? உன் சபையை இழந்துபோனாயோ ?

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே, தேவஊழியரே !

உங்களைத் தேற்றுவதற்காகவே கர்த்தருடைய வார்த்தை கடந்து வருகிறது.

***அதைப் பின்தொடர்; அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய்.***

**மூன்றாவதாக:** பவுல் கூறும் வார்த்தைகளை கவனித்துப் பாருங்கள்.

**<u>பிலிப்பியர் 3:12,13</u>**

கிறிஸ்துஇயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.

**<u>பக்தன் பாடுகிறார்:</u>**

**பரம அழைப்பின் பந்தய பொருளுக்காய்**
**நான் இலக்கை நோக்கி ஓடுகிறேன்**
**ஓடுகிறேன், நான் ஓடுகிறேன்**
**என் இயேசுவுக்காய் நான் ஓடுகிறேன்**

நீங்களும் பாடுவீர்களா ? கரம் தட்டி பாடுங்கள். நம்பிக்கையோடே பாடுங்கள்.

**<u>1கொரிந்தியர் 9:24</u>**

பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா ? நீங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்.

பவுல் கூறுகிற வார்த்தையை மீண்டுமாக கவனியுங்கள்.

கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காக பிடிக்கப்பட்டேனே, அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய் தொடருகிறேன்.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே !

கிறிஸ்து இயேசுவினால் எதற்காக பிடிக்கப்பட்டீர்களோ அதைப் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய் தொடருங்கள்.

ஏனெனில் கர்த்தருடைய வாக்குத்தத்தம் கூறுகிறது:

***அதைப் பின்தொடர்; அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய்.***

தேவன் உங்களை அழைத்த அழைப்பை ஒரு விசை சிந்தித்துப் பாருங்கள். அதைப் பின் தொடருங்கள்.

ஒருவிசை பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**அதைப் பின் தொடர்வேன் அதை நான் பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வேன்.** தேவனுக்கே மகிமை !

**சிந்தனைக்கு!**

கிறிஸ்துஇயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்.

**பிலிப்பியர் 3:12**



## டி.வி.ஜி.எம். தையல்பள்ளியின் அனுபவ சாட்சி

எனது பெயர் K. **ஜான் நேசகுமார்.** சொந்த ஊர் **மஞ்சம்பட்டி**. நான் இந்து குடும்பத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு தையல் தொழில் செய்து வந்தேன்.

முதன்முதலாக 2004 ஜனவரியில் டி.வி.ஜி.எம். ஸ்தாபனம் கறம்பக்குடியில் தையற்பயிற்சிக்காக 4 தையல் இயந்திரத்தை வாங்கி கொடுத்தார்கள்.

பிறகு அந்த தையல் இயந்திரங்கள் கல்லுக்காரன்பட்டியில் உள்ள நலிந்த கிறிஸ்தவ மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டு என் வசம் 2004 ஜுலை கொடுக்கப்பட்டது. அதன் மூலமாக கந்தவர்க்கோட்டையில் AJC சபையில் 12 பெண்களுக்கு பயிற்சி கொடுத்து அக்டோபர் 10ல் சான்றிதழ் கொடுத்தோம்.

பிறகு நற்சாந்துபட்டியிலுள்ள AJC சபைக்கு மெஷின்கள் கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பொன்னமராவதியிலுள்ள ஆசிரியர் செல்வின் அவர்கள் வசம் கொடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டது.

பிறகு 4 மெஷின்கள் 6 மெஷின்களாக மாறி 2 பிரிவாக பிரிக்கப்பட்டு ஆலங்குடி AJC–க்கு ஒரு பிரிவும் (3மெஷின்) சீர்காழியிலுள்ள ஒரு திருச்சபைக்கு ஒரு பிரிவும் (3 மெஷின்) கொடுக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து 2006ஆம் ஆண்டு 6 தையல் மிஷின்களையும் ஒருங்கிணைத்து புதுக்கோட்டை மாவட்டம் – விளாரிப்பட்டி கிராமத்தில் தற்காலிகமாக கட்டப்பட்டு, நான் நடத்தி வந்த திருச்சபையில் வைத்து பயிற்சி கொடுத்தேன். சுமார் 12 பெண்களுக்கு பயிற்சி கொடுத்தோம்.

2006 விளாரிப்பட்டியில் நான் நடத்தின போது டி.வி.ஜி.எம். ஸ்தாபனம் மூலமாக 6 ஸ்டூல், 1 டேபிள் வாங்கினோம்.

**மொத்த மெஷின் & உபகரணம்:–** 6 தையல் மெஷின்கள், 6 ஸ்டூல், 1 டேபிள்

பிறகு பட்டுக்கோட்டை ஒட்டங்காடு என்ற கிராமத்திற்கு AJC சபைக்கு கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து வேலாடிப்பட்டியில் டி.வி.ஜி.எம். மூலமாக கட்டப்பட்ட AJC சபைக்கு கொடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நவம்பர் 2007ல் புதிதாக கட்டப்பட்ட பில்லுவெட்டு விடுதி AJC சபையில் (விளாரிப்பட்டி சபை) வைத்து 15 பெண்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு 22.02.2008ல் TVGM ஸ்தாபகர் மூலமாக சர்டிபிகேட் கொடுக்கப்பட்டது.

**தற்பொழுது பயிற்சி மாத்திரம் கொடுத்து அனுப்பும்போது:–**

* அவர்கள் தொடர்ந்து ஆலயம் வருவதில்லை.
* சிலர் மெஷின் வாங்கமுடியாததால் பயிற்சி பலனில்லை.
* சிலர் மெஷின் வாங்கினாலும் மக்கள் நம்பி துணிகள் தைக்க கொடுப்பதில்லை. அதனாலும் பயிற்சி பலனில்லை.
* எனவே பயிற்சி முடித்த பிறகு நாமே அவர்களுக்கு தொழிலுக்கு ஏற்பாடு செய்யலாம் என்று முடிவு செய்தேன்.
* அதற்கு கூடுதலாக 10 தையல் மெஷின்கள் தேவைப்படுகிறது.
* ஒரு புறம் பயிற்சி. மறுபுறம் வருமானம் ஈட்டக்கூடிய தொழில் என மக்களுக்கு சேவை செய்ய என்னை அர்பணித்தேன். அதற்கேற்றபடி தற்பொழுது ரூ 600 மாத வாடகைக்கு ரூம் எடுத்து பயிற்சி கொடுத்துக்கொண்டும், மேலும் தேவையுள்ள மெஷின்களுக்காகவும் ஜெபித்து வருகிறேன்.

**குழு 7: சகோ. ஐசக், ஜீவசுந்தர்:-**

நாங்கள் நாங்குபட்டி, கணக்கன்பட்டி பகுதிகளை சேர்ந்த 8 கிராமங்களில் வீடுவீடாக சுவிசேஷம் அறிவித்தோம். வியாதியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஜெபித்தோம். கர்த்தர் கிருபையாக விடுவித்தார். அவர்கள் சபைக்கும் வருவதாக வாக்கு கொடுத்தனர். பல இடங்களில் ஜெபக்குழுக்களை ஆரம்பிக்கும்படி கேட்டு இருக்கின்றனர். சிறு பிள்ளைகளை ஒன்று சேர்த்து பாடல்கள் சொல்லி கொடுத்தோம். சிறுவர்கள் மகிழ்வுடன் சிலுவைக்கொடியை அசைத்து பாடினார்கள். 600 சுவிசேஷப் புத்தகங்களும், 600 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 8: போதகர் சாமுவேல், சகோ. உதயக்குமார்:-**

நாங்கள் மனவிடுதி, கூழியான்விடுதி பகுதிகளை சேர்ந்த 8 கிராமங்களில் வீடுவீடாக சென்று சுவிசேஷப் புத்தகமும், சிலுவைக்கொடியும் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். அனைத்து கிராமங்களிலும் நல்ல வரவேற்பு இருந்தது. பல வீடுகளில் மக்கள் தங்கள் பிரச்சனைகளை எங்களிடம் பகிர்ந்துகொண்டு ஜெபிக்கக் கேட்டுக்கொண்டனர். கூழியான்விடுதி மக்கள் அநேகர் இயேசுவைக் குறித்து அறிந்து வைத்திருந்தனர். கணேஷ் நகர் மக்களும் மிகுந்த ஆர்வத்துடன் சத்தியத்தை கேட்டனர். 400 சுவிசேஷப் புத்தகங்களும், 400 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 9: போதகர் இஸ்ரேல், சகோ.சுப்பிரமணியன்:-**

நாங்கள் கணபதிபுரம் பஞ்சாயத்தை சேர்ந்த 4 கிராமங்களில் வீடுவீடாக சென்று சுவிசேஷப் புத்தகங்களையும், சிலுவைக்கொடியையும் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். பாவ, சாப கட்டுகளிலிருந்த மக்களுக்கு கட்டுகள் அறுக்கப்பட விடுதலை கிடைக்க ஜெபித்தோம். சில வீடுகளில் இருந்த மக்கள் மெய்யான தாகத்தோடு சத்தியத்தைக் கேட்டனர். 400 சுவிசேஷப் புத்தகங்களும், 400 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 10: போதகர் ஜான் செல்லப்பா, சகோ. சார்லஸ்:-**

நாங்கள் மேல்புலவன்காடு, சுந்தகோிபட்டி, மில்முக்கம், புதுவயல் பகுதிகளில் சுவிசேஷப் புத்தகமும், சிலுவைக்கொடியும் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். எங்கும் எதிர்ப்புகள் இல்லை. பல இடங்களில் மக்கள் ஆவலுடன் சத்தியத்தை கேட்டனர். 400 சுவிசேஷப் புத்தகங்களும், 400 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 11: சகோ. ஜான் நேசக்குமார், இம்மானுவேல்:-**

நாங்கள் வடவாளம் பஞ்சாயத்தை சேர்ந்த 8 கிராமங்களில் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்தோம். வடவாளத்தில் ஒரு சகோதரி எங்களை அன்புடனும், மரியாதையுடனும் ஏற்றுக்கொண்டு, காணிக்கை கொடுத்து அனுப்பினார். ஆனால் அதே கிராமத்தில் வேறு சில சகோதரிகள் நாங்கள் இந்துக்கள். எங்களுக்கு இயேசுவைப் பற்றி சொல்ல வேண்டாம் என எதிர்ப்பு தெரிவித்தனர். அதே ஊரில் இளைஞர் பேரவை இருந்தது. பயத்துடன் சென்றோம். ஆனால் தேவன் திறந்த வாசலை வைத்திருந்தார். வாலிபர்களுக்கு சத்தியத்தை சொல்ல கர்த்தர் உதவி செய்தார். 400 சுவிசேஷப் புத்தகங்களும், 400 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.



## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "100 - **கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

## கோயம்புத்தூர் - குடிமங்கலம் யூனியன் 100 - கிராம ஊழியம்

<u>**நோக்கம்:**</u> **2008 ஜுன் 16** திங்கள் காலை 9 மணி முதல் **ஜுன்20** வெள்ளி இரவு 10 மணி முடிய **கோயம்புத்தூர் மாவட்டம் - குடிமங்கலம் யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2008 ஜுன் 16** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2008 ஜுன் 20** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2008 ஜுன் 16- 20 <u>தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி</u> )**

<u>**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**</u>

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,**
**C/o தேவனுடைய வீடு,**
**பாரதி நகர், பெட்ரோல் பங்க் பின்புறம்,**
**நால் ரோடு, குடிமங்கலம்,**
**உடுமலை தாலுகா,**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**

<u>**நன்றி**</u> : உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர் தோமா** அவர்களுக்கு நன்றி!

<u>**தகுதி**</u> : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

<u>**பிரயாணப்படி**</u> : தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

<u>**முக்கிய அறிவிப்பு**</u> : 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

<u>**சகல தொடர்புகளுக்கும்**</u> : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# ஈரோடு - காங்கேயம் யூனியன்
# 100-கிராம ஊழியம் அறிக்கை

**THANKS: Patmos ( Dr.Tor & Sis. Fera )**



கர்த்தருடைய கிருபையால் ஈரோடு மாவட்டம் – காங்கேயம் யூனியனில் 14.04.2008 திங்கள் முதல் 19.04.2008 சனி வரை 100–கிராம ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள் கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை காங்கேயம் A.G. சபை **பாஸ்டர் K.C.சாமுவேல்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 39 கிராம ஊழியர்கள் கலந்துகொண்டு ஊழியம் செய்தார்கள்.

முதல்நாள் ஜெபத்தில் **காங்கேயம்** யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. காங்கேயம் A.G. சபையின் உதவி போதகர் **ஜோயல் பாபு** அவர்கள் தேவசெய்தி கொடுத்து ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள்.

இதன்பின் கிராம ஊழியர்கள் 9 குழுவாகப் பிரிந்து, அவரவர் ஊழியம் செய்யப் போகும் கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். மதிய உணவுக்குப் பின் அவரவர் ஊழியம் செய்ய வேண்டிய கிராமங்களுக்கு கடந்து சென்று ஊழியம் செய்தார்கள். மொத்தம் 9,769 யோவான் சுவிசேஷப்புத்தகங்களும், 10,000 சிலுவைக்கொடிகளும், 14,000 கைப்பிரதிகளும் கொடுத்து கர்த்தரை பிரஸ்தாபப் படுத்தினார்கள். 134 பேர் தங்கள் விலாசங்களை கொடுத்து, தபால் மூலம் வேதபாடம் அனுப்ப கேட்டுக் கொண்டனர்.

இப்படி கிராமங்களில் ஊழியம் செய்து கொண்டிருக்கும்போது ஒரு குழுவினரை கிறிஸ்தவ எதிர்ப்பு இயக்கத்தினர் பிடித்து தகாத வார்த்தைகளைப் பேசி அவர்களை போலீஸில் ஒப்படைத்தனர். போலீஸார் விசாரித்து விட்டு இனி ஊழியம் செய்ய வேண்டாம். போய் விடுங்கள் என்று எச்சரித்து அனுப்பினர். இதனால் மற்ற கிராம ஊழியர்களுக்கும் இது பற்றி தெரிவிக்கப்பட்டு, அவர்கள் ஊழியம் செய்து கொண்டிருந்த கிராமங்களி லிருந்து வரவழைத்து, **சென்னிமலை** யூனியனிலுள்ள **பசுவபட்டி** என்ற ஊராட்சியிலுள்ள கிராமங்களில் சுவிசேஷ புத்தகங்களைக் கொடுத்து ஊழியம் செய்தார்கள். இப்படி ஊழியங்களை முடித்து, காங்கேயம் செல்லாமல் பசுவபட்டி கிராமத்திலுள்ள **இயேசுவின் திருச்சபை** யில் ஊழியர்கள் கூடி கர்த்தர் தங்களை எப்படி கிராமங்களில் நடத்தினார் என சாட்சி கூறினர்.

கடைசி நாள் ஜெபத்தில் நியூசிலாந்திலிருந்து வந்திருந்த **பாஸ்டர் விக்கி, பாஸ்டர் மெல்வின் பிள்ளை, பாஸ்டர் பீட்டர்** ஆகியோர் கலந்து கொண்டு ஊழியர்களின் சாட்சியை கேட்டு,ஆச்சரியப்பட்டு கர்த்தரை மகிமைப் படுத்தினார்கள். மூவரும் கர்த்தருடைய செய்தியை கொடுத்து ஊழியர்களை உற்சாகப்படுத்தி ஜெபித்தார்கள்.



ஆர்வமாய் சுவிசேஷத்தைக் கேட்டு **தன் வாழ்வை ஒப்புக் கொடுத்து, சபைக்கு வருவேன்** என்று உறுதி கூறினார். 600 சுவிசேஷப் புத்தகங்களும், 600 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 3: சகோ. A.V.ராஜா. R.T.கலைவாணர்:–**

நாங்கள் தொண்டமான் ஊரணி பகுதிகளை சேர்ந்த 7 கிராமங்களில் சுவிசேஷப் புத்தகமும், சிலுவைக்கொடிகளும் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். அநேகர் தங்கள் குடும்ப பிரச்சனைகளை எங்களிடம் சொல்லி ஜெபிக்கக் கேட்டுக் கொண்டனர். சிலர் சபைக்கு வந்து ஆராதனையில் பங்கு பெறவும் ஆர்வமாக உள்ளனர். அநேக மக்கள் மாத பத்திரிக்கைகளை அனுப்பும்படி கேட்டுக் கொண்டனர். 400 சுவிசேஷப் புத்தகங்களும், 400 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 4: சகோ. பால் சுரேஷ், அன்பரசன்:–**

நாங்கள் பெருங்களூர், பாப்பாவயல் பகுதிகளை சேர்ந்த 5 கிராமங்களில் சுவிசேஷப் புத்தகமும், சிலுவைக்கொடியும் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். கர்த்தர் எங்களை அற்புதமாக நடத்தினார். ஒரு நாள் எங்களது கரத்தில் சாப்பிட ஏதும் இல்லாமல் மிகுந்த பசியுடனும், சோர்வுடனும் சத்தியத்தை அறிவித்துக் கொண்டு இருந்தோம். அப்போது நாங்கள் நடந்து வந்த வழியில் ரூ.20/– கீழே கிடந்தது. மீனின் வாயிலிருந்து பணத்தை எடுக்க சொன்ன அதே தேவன் நாங்கள் நடந்து வந்த பாதையிலும் பணம் கிடைக்க உதவி செய்தார். அநேகர் சத்தியத்தை வாஞ்சையுடன் கேட்டார்கள். ஒரு சிலர் தங்கள் வியாதிகளுக்காக ஜெபித்து கொண்டனர். 400 சுவிசேஷப் புத்தகங்களும், 400 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 5: சகோ. பவுல்சிங், ஜோசப்:–**

நாங்கள் இராஜகோபாலபுரம், ஆவூர், குன்னவயல் பகுதிகளில் வீடுவீடாக சுவிசேஷப் புத்தகமும், சிலுவைக்கொடியும் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். நாங்கள் சந்தித்த பகுதிகளில் அநேகர் மாதாவை வணங்குகிற கத்தோலிக்க கிறிஸ்தவர்கள். இருப்பினும் மாதாகோவிலை திறந்து கொடுத்து நாங்கள் தங்கும்படி கூறினார்கள். ஒரு சகோதரி எங்களுக்கு உணவளித்து வரவேற்றார். பிசாசினால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணை ஜெபத்திற்கு அழைத்து வந்தனர். பிசாசு அந்த பெண்ணை அலைக்கழித்ததை பார்த்து அநேகர் கூடி விட்டனர். அவர்களுக்கு விடுதலையின் நற்செய்தியை அறிவித்தோம். 600 சுவிசேஷப் புத்தகங்களும், 600 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 6: சகோ. லாரன்ஸ், ஏசுதாஸ்:–**

நாங்கள் தொண்டைமான் விடுதியை சேர்ந்த பகுதிகளிலும் கீழபட்டி, உஞ்சலிப்பட்டி, வீரடிபட்டி, சேவுகம்பட்டி போன்ற பகுதிகளிலும் வீடுவீடாக சென்று சுவிசேஷப் புத்தகமும், சிலுவைக்கொடியும் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். கீழப்பட்டியை சேர்ந்த நடராஜன் என்பவர் சபைக்கு வருவதாக கூறி, தனது விலாசத்தை கொடுத்தார். பிசாசினால் பாதிக்கப்பட்டவர்களின் விடுதலைக்காக ஜெபித்தோம். துரத்தப்பட்ட பிசாசுகள் எங்களுடைய சரீரத்தில் பெலவீனங்களை கொடுக்க முயற்சி செய்தன. ஆனாலும் பிசாசை மிதிக்க, ஜெயமெடுக்க ஆவியானவர் எங்களுக்கு உதவி செய்தார். 600 சுவிசேஷப் புத்தகங்களும், 600 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

# 100 கிராம ஊழிய திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்ட சுவிசேஷப் பணி AJC – நடமாடும் சுவிசேஷக் குழு

கர்த்தருடைய கிருபையினால் 25.03.08 அன்று புதுக்கோட்டை யூனியனில் **AJC நடமாடும் சுவிசேஷக் குழு**வை **சகோதரி. ஜெயசீலி** ஜெபித்து ஆரம்பித்து வைத்தார்கள். 27.03.08 அன்று இறுதி நாள் சாட்சிக் கூட்டத்தில் **பாஸ்டர். குமார் சாமி,** (**UK**) அவர்கள் தேவசெய்தியளித்து, இனிப்புகள் வழங்கினார்கள். **இயேசுகிறிஸ்துவின் பேழை** தலைமை போதகரும், ஸ்தாபகருமான **பாஸ்டர் கைவல்யம் டேவிட்** உணவு காரியங்களை பொறுப்பெடுத்து உதவி செய்தார்கள்.

டி.வி.ஜி.எம். ஸ்தாபகர், **சகோ. பி.டி. கிறிஸ்டோபர்** ஊழியம் செய்யும் முறைகளை முதல் நாள் விளக்கிக்கூறி, பயிற்சி அ ளித்தார்கள். சுவிசேஷப் புத்தகம், பிரயாணப்படி மற்றும் கிராம சர்வே செலவுகளை முழுப்பொறுப்பெடுத்தார்கள்.

**AJC** ஊழியர்கள் 20 பேர் 3 நாள் பங்கேற்றார்கள். சகோ. லாரன்ஸ், சகோ. பவுல்சிங் சர்வே காரியத்திலும் மற்றும் சகோ. ஜெயசீலன் பதிவு காரியத்திலும் முக்கிய பங்கை வகித்தார்கள். இந்த ஊழியத்தின் மூலம் கிராமங்களில் 200 பேர் தங்கள் விலாசங்களை கொடுத்து வேதபாடம் அனுப்ப கேட்டுக் கொண்டனர்.

### கிராம ஊழியர்ளின் சில முக்கிய அனுபவ சாட்சிகள்:-

**குழு 1: சகோ. ராஜா கிறிஸ்டோபர், எபநேசர்:-**

நாங்கள் இருவரும் சோத்துப்பாளை பஞ்சாயத்திலுள்ள நரிக்கொள்ளபட்டி, உரியம்பட்டி, சொக்கநாதபட்டி, சோத்துபாளை கிராமங்களில் வீடுவீடாக சென்று புத்தகங்களை கொடுத்தோம். இரட்சிக்கப்படுவதற்கு முன்பு ரௌடியாக, முரடனாக அதே பகுதியில் சுற்றின நான் இன்று இரட்சிப்பின் சந்தோஷத்தை பெற்ற அமைதியான, அன்பான தேவ ஊழியனாக அந்த மக்கள் முன்பு சென்று இயேசுவைப் பற்றி கூறின போது அநேகர் ஆச்சரியப் பட்டார்கள். உன்னை இப்படி மாற்றின இயேசுவை நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம் என்று கூறினார்கள். இரட்சிக்கப்பட்ட ஒ ரு சகோதரியை அவர்களுடைய கணவர் ஆலயத்திற்கே போகக் கூடாது என்று கண்டிப்புடன் கூறி விட்டதால் அந்த சகோதரி அழுது கொண்டே தனது வேதனைகளை எங்களுடன் பகிர்ந்து கொண்டார்கள். அதன் பிறகு அவரது கணவரை நாங்கள் சந்தித்து அவருடன் சில மணி நேரங்கள் ஆலயத்திற்கு செல்வதின் அவசியத்தைக் குறித்து பேசினோம். **அவர் தன் மனைவியை தவறாமல் ஆலயத்திற்கு அனுப்புகிறேன்** என சம்மதித்தார். 500 சுவிசேஷப் புத்தகங்களும் 500 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 2: சகோ. V.மாற்கு, C.கண்ணன்:-**

நாங்கள் வாகவாசல், புத்தாம்பூர், செம்பாட்டூர், மங்களத்துப்பட்டி பஞ்சாயத்துகளை சேர்ந்த 8 கிராமங்களில் வீடுகள் தோறும் லூக்கா சுவிசேஷப் புத்தகமும், சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம். அனைத்து கிராமங்களிலும் நல்ல வரவேற்பு இருந்தது. இதில் செம்பாட்டூரை சேர்ந்த மலை நடராஜன் என்ற சகோதரன்



## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1: சகோதரி மரியம்மாள், கஸ்தூரி, மேரி மீனா, எஸ்தர் பேபி.**

நாங்கள் 10 கிராமங்களுக்கு சென்று வீடுகள் தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகங்களை கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். யாவரும் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டனர். 750 சுவிசேஷப் புத்தகங்களும்,1000 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 2: சகோதரி கிரேஸ் பத்மா, சீலா, அமிர்தம், சமாதானமேரி.**

மரவபாளையம் ஊராட்சியிலுள்ள 11 கிராமங்களில் வீடுவீடாக சுவிசேஷப் புத்தகங்களைக் கொடுத்து இயேசுவின் நற்செய்தியை கூறினோம். அநேகருக்காக ஜெபித்தோம். கடைசி நாளான வெள்ளிக் கிழமை சென்னிமலை யூனியனிலுள்ள 5 கிராமங்களில் ஊழியம் செய்தோம். அதிக எதிர்ப்பும் இல்லை, வரவேற்பும் இல்லை. மொத்தம் 1250 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3: சகோதரி வசந்தா ஸ்டீபன், ஜெப மணி,அன்னக்கிளி, கிளமெண்ட்ஸ் மேரி.**

ந த்தக்காடையூர், ஒடைக்காடு, சிவசக்திபுரம், ரத்தினபுரி கிராமங்களில் வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். குறிசொல்லுகிற ஒரு மனிதனுக்கு சுவிசேஷம் சொன்னபோது, அவர் அன்புடன் ஏற்றுக்கொண்டு, குறிசொல்லுவது பிழைப்புக்காக என்று சொன்னார். **முள்ளிபுரம்** கிராமத்தில் ஒருவன் எங்களை திட்டி இது ஒரு பொழப்பா செத்துபோங்கள் என்று இழிவாகப் பேசினான். மற்ற கிராமங்களில் எதிர்ப்பு இல்லை. 816 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4: சகோதரி மேரி செல்லாபாய், லீதியாள்,தேவகிருபை, கிரேஸ் மாலதி, சலோமி சம்மனசு.**

கவுண்டம் பாளையம் ஊராட்சியிலுள்ள 12 கிராமங்களுக்கு சென்று யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். ராஜேந்திரன் என்ற வாலிபன் இயேசு யார்? எங்கே பிறந்தார்? இப்போது எங்கே இருக்கிறார்? என்று கேள்விகள் கேட்டான். இவனுக்கு இயேசுவின் அன்பை பற்றி விளக்கி சொன்னபோது, **இயேசுவை ஏற்றுக் கொண்டு, என் நிலத்தில் ஆலயம் கட்ட இடம் தருகிறேன், நீங்கள் வந்து கட்டுங்கள். நான் ஆலயத்திற்கு வருகிறேன்** என்று சொன்னான். மேலும் அநேக வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1350 சுவிசேஷப் புத்தகங்களும், 1000 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 5: சகோ.மாற்கு மாரியப்பன், ஜேம்ஸ்ராஜா, மகாராஜன், ஸ்டீபன்ராஜ்.**

பொத்திப்பாளையம் பகுதியிலுள்ள வீடுகளில் மக்களை சந்தித்து சுவிசேஷம் சொல்லி, புத்தகங்கள் கொடுத்தோம். வழியில் 4 பெண்கள் எங்களைப் பார்த்து என்ன ஜூஸ் விற்கிறீர்களா? என்று கேட்டார்கள். நாங்கள் இல்லை இயேசுவைப் பற்றி சொல்லுகிறோம் என்றோம். அதற்கு அவர்கள் **இயேசு என்ன விலை** என்று கேட்டார்கள். **இயேசு தான் கடவுள்** என்று சொல்லி கடந்து போனோம். நாங்கள் சென்ற கிராமங்களில் அநேக பாமர மக்கள் தான் இருக்கிறார்கள். சத்தியத்தை அறிவித்து ஜெபித்தோம். 603 சுவிசேஷப் புத்தகங்களும், 1000 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 6: சகோதரி டோரா லாசர், லூயிஸ் அம்மாள், தெபோராள், அன்னாள், கிருபா.**

நாங்கள் கடலைகாட்டூர் கிராமப் பகுதிக்கு சென்று வீடுவீடாக சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தோம். எங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது.ஒரு சில இடங்களில்

புத்தகங்கள் வாங்க மறுத்தார்கள். ஒரு வாலிபன் ஒருவன் உங்கள் இயேசுவை சொல்லுவதற்கு எங்கள் கிராமத்திற்கு எப்படி வந்தீர்கள் ? எவ்வளவு துணிச்சல் இருந்தால் எங்கள் கிராமத்திற்கு வருவீர்கள் ? என்று கேட்டு எங்களை விரட்டினான். சில பெண்கள் எங்கள் பையன்களிடம் கேட்டு விட்டு அவர்கள் சரி என்றால் உங்கள் இயேசுவை வணங்குவோம் என்றார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 1000 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 7: சகோ.தாஹாகனி, பீட்டர் ராமலிங்கம், சூசைமாணிக்கம், பவுல் கோபால்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் அநேகர் சுவிசேஷப் புத்தகங்களை ஆர்வமுடன் வாங்கினர். சின்னப்புதூர் கிராமத்தில் எல்லா வீடுகளிலும் சுவிசேஷ புத்தகம் கொடுத்து விட்டு, கடந்து வரும் போது ஒரு இளைஞன் வந்து கோபமாக பேசி ஊரைவிட்டு போய்விடுங்கள் என்று சொல்ல நாங்கள் அமைதியாக வேறு பகுதிக்கு கடந்து போனோம். இதை தெரிந்து கொண்டு 10 பேருக்கும் மேலாக வாலிபர்கள் திரண்டு வந்து எங்களை மறித்து நாங்கள் வைத்திருந்த சுவிசேஷப் புத்தகம், கைப்பிரதிகளை பறித்துக் கொண்டு மிகவும் கேவலமாக எங்களை திட்டி, இன்னும் எத்தனை பேர் இப்பகுதி களில் புத்தகம் கொடுக்க வந்தீர்கள் என்று கேட்டு எங்களை போலீஸில் ஒப்படைத்தார்கள். இதன்பின் காங்கேயம் பாஸ்டர் சாமுவேல் அவர்கள் வந்து பேசி எங்களை மீட்டார்கள். கர்த்தர் எங்களை பொல்லாதவர்களிடமிருந்து காத்து கொண்டார்.1500 சுவிசேஷப்புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8: சகோ.பிரேம்ஆனந்த், ஜான் உதயக்குமார், ஜெபமலைநாதன், ஸ்டான்லி.**

சிவன்மலை ஊராட்சியிலுள்ள கிராமங்களில் வீடுகள்தோறும் புத்தகம் கொடுத்தோம். யாவரும் வாங்கிக் கொண்டனர். நந்தவனப்புதூரில் வயதான விதவைகள் அநேகர் இருந்தார்கள். இவர்களுக்கு சுவிசேஷம் சொன்னபோது வாஞ்சையாக கேட்டார்கள். **அணைக்குழி மேடு** என்ற கிராமத்தில் ஒரு வீட்டில் எங்களை கோபமாக பேசி, இப்படித் தான் வருவீர்கள். பிறகு எதையாவது திருடிக் கொண்டு போய்விடுவீர்கள் என்றனர். நாங்கள் அப்படியல்ல இயேசுவின் நற்செய்தியை சொல்ல வந்தோம் என்று சொன்னோம். மொத்தம் 1200 சுவிசேஷப் புத்தகங்களும், 1000 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 9: சகோ.ஆரியப்பன், இஸ்தாக்கி, செல்வராயர்பால், ஏசுதாஸ்.**

பாப்பினி, படியாண்டிபாளையம் கிராமங்களில் மக்கள் ஆர்வமுடன் கேட்டு சுவிசேஷப் புத்தகம் வாங்கினார்கள். கிராமங்களில் வியாதியாக இருந்த அநேக ருக்காக ஜெபித்தோம். கிராமங்களில் மக்கள் ஆர்வமுடன் ஏற்றுக் கொண்டனர். எந்த எதிர்ப்பும் இல்லை. மொத்தம் 1300 சுவிசேஷப் புத்தகங்களும், 1000 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

**2008 ஜுன் மாத**
**இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : கரூர்
யூனியன் : K. பரமத்தி
நாள் : 28.06.2008 சனி
நேரம் : காலை 9 மணி

**நடைபெறும் இடம்**
**பாஸ்டர் N. திருத்தவத்துரை**
**B.C.I. சர்ச்,**
**கொங்கு நகர்,**
**செல்வக்குமார் கல்யாணமண்டபம் பின்புறம்,**
**சின்ன தாராபுரம் - 639 202.**
**கரூர் மாவட்டம்.**
**செல்: 9943227376**



# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

### புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

1. Sis.**சண்முகபிரியா, விருதுநகர்.**
என் அம்மாவின் மருத்துவ செலவிற்காக வைத்திருந்த பணம் ரூ.1000 திடீரென காணாமல் போய் விட்டது. அது கிடைக்குமாறு பொருத்த னையோடு ஜெபித்தேன். பணம் உடனே கிடைக்க கர்த்தர் கிருபை செய்தார்.

2.Sis.**தமிழரசி, ஈரோடு.**
என் மகன் வீட்டுக்கு வருவதில்லை என்று போன மாதம் ஜெபிக்க சொல்லி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்டு என் மகனை வீட்டுக்கு கொண்டு வந்தார்.

3.Sis.**தீபலட்சுமி, விழுப்புரம்.**
எனக்கு திருமணம் நடக்க வேண்டு மென்றும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 13.12.07 அன்று திருமணத்தை சிறப்பாக நடத்தி தந்தார். தேவைகளை சந்தித்தார்.

4.Sis.**அனுசுயா, கடலூர்.**
எனக்கு திருமணம் நடக்க வேண்டு மென்று ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தரின் கிருபையால் திருமணம் நடந்தது.

5. Bro.**சுந்தர்ராஜ், கரூர்.**
நான் வீடு கட்ட வேண்டும் என்று ஜெபிக்க சொல்லியிருந்தேன். கர்த்தரின் கிருபையாலும், உங்கள் ஜெபத்தாலும் அது நடந்தது.

### விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

1.Sis. **ரெஜி பிரியா, கன்னியாகுமரி.**
எனக்கு திருமணம் கிறிஸ்தவ முறைப்படி நடக்க வேண்டுமென தங்களிடம் ஜெபிக்க கேட்டிருந்தேன். அதின்படியே 2007 டிசம்பர் 5ம் தேதி என் திருமணம் நடைபெற்றது. மிக்க மகிழ்ச்சி. ஜெபித்த உங்களுக்கும், அற்புதம் செய்த தேவனுக்கும் கோடானுகோடி நன்றிகள்.

2.Bro.P.S. **ஜோசப், நாமக்கல்.**
கடந்த நாட்களில் என் மகள் எப்சிபாவுக்கு உடல் நலமில்லாமல் இருந்தது. நான் உங்கள் பத்திரிக்கையில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் சுகம் தந்தார்.

3.Sis.**ருக்மணி, திண்டுக்கல்.**
நான் இரண்டு, மூன்று முறை M.A. தேர்வு எழுதும்போது தங்களிடம் ஜெபிக்க கடிதம் எழுதியிருக்கிறேன். தாங்களும் ஜெபித்து கடிதம் எழுதுவீர்கள். ஆனால் ஒரு பேப்பர் பாஸாகுவது அல்லது தோல்வி என ரிசல்ட் வரும். கொஞ்ச நாட்களாக மனவருத்தமாயிருந்தது. பிறகு முடிந்த வரை தேர்வு எழுதுவோம் என்று மறுபடியும் தேர்வு எழுதினேன். **உன் நம்பிக்கை வீண்போகாது** என்ற வசனத்துடன் உங்கள் கடிதமும் வந்தது. ரிசல்ட்டும் வந்தது. ஆனால் இம்முறை தேர்வில் M.A. Complete ஆக முடிக்க கர்த்தர் உதவி செய்தார்.

### 2008 ஏப்ரல் மாத இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை

கர்த்தருடைய கிருபையால் திருவாரூர் மாவட்டம் – கோட்டூர் யூனியனில் 26.04.2008 அன்று கீழப்பனையூர் எபிரோன் ஜெபவீட்டில் **இயேசுவை விரும்புவோர் முகாம்** நடைபெற்றது. 5 பேர் ஆர்வமுடன் வந்து கலந்துகொண்டார்கள். இவர்களுக்கு இயேசுவின் அன்பு, பரலோகவாழ்வு பற்றி விளக்கி கூறப்பட்டது. இவர்களுக்காக **எபிரோன் ஜெபவீடு** பாஸ்டர் அம்மா ஜெபித்தார்கள். **தேவனுக்கே மகிமை!**